ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2416/51 - 2024 දෙසැම්බර් මස 28 වැනි සෙනසුරාදා - 2024.12.28
*2416/51 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம்

*1990 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் **நலிந்த ஜயதிஸ்ஸ,**
*சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்.*

கொழும்பு,
*2024, திசெம்பர் 27.*

**ஒழுங்குவிதிகள்**

*2023, திசெம்பர் 27 ஆந் திகதியன்று 2364/24 எனும் இலக்க வர்த்தமானியினூடாக திருத்தப்பட்டவாறான, 2023, பெப்புருவரி 14 ஆந் திகதியன்று 2319/40 எனும் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் உணவு [சுட்டுத்துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும் (Labeling and Advertising)] ஒழுங்குவிதிகள் மேலும் இதனூடாக பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது.*

1. மேற்படி ஒழுங்குவிதிகளில் 1 ஆவது ஒழுங்குவிதியினை இரத்துச் செய்வதனூடாக, பின்வரும் ஒழுங்குவிதிகள் இதனூடாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

    1. (i) இந்த ஒழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ii) ஒழுங்குவிதிகள் 2 தொடக்கம் 13(15) வரையும் மற்றும் 15 ஆவது ஒழுங்குவிதியும் I தொடக்கம் IX வரையான அட்டவணைகளுடன் 2025, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வருதல் வேண்டும்.

(iii) ஒழுங்குவிதிகள் 13(16), 13(17), 13(18) மற்றும் 14 ஆகியன 2025, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருதல் வேண்டும்.

2. அந்த ஒழுங்குவிதிகளில் 13(16) ஒழுங்குவிதியின் சிங்கள வாசகத்தில் குறிப்பிடப்பட்ட “குழந்தைகள்” என்ற வார்த்தைக்குப் பதிலாக “சிறிய குழந்தைகள்” என்ற வார்த்தைகளினால் மாற்றுவதன் மூலம் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

EOG 12-0287

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.